Registered as a Newspaper

O/L இலவச வினா-விடை
மீட்டல் வகுப்புகள்
(எல்லாப் பாடங்களும்)
... செயல்களினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்காக இவ்வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்க
Bond INSTITUTION JAFFNA.

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

A/L விஞ்ஞானக் கல்விக்கு
யாழ் நகரில் மிகவும் பாதுகாப்பான சூழலில்
ஒழுங்கான வகுப்புகளுக்கு அனுபவமும் ஆற்றலும் வாய்ந்த பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்ட ஒரே நிறுவனம்.
Bond INSTITUTION JAFFNA

8
சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஞு புரட்டாதி மீ 26 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1406 ஸபர் பிறை 7 (12-10-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 27

## பெரியாஸ்பத்திரி மீது மீண்டும் ஷெல்

யாழ்ப்பாணம், அக். 12

கோட்டையில் இருந்து அடுத்தடுத்து ஏவப்பட்ட இரண்டு ஷெல்களில் நேற்று மாலை யாழ் பெரியாஸ்பத்திரி மீதும் விழுந்து பயங்கரமாக வெடித்தன.

இதனால் மேகநோய் சிகிச்சை நிலையம் (33 ஆம் அறை) முற்றுகச் சேதம் அடைந்தது.

கடந்த மாதமும் இதே போன்று ஆஸ்பத்திரிமீது ஷெல் விழுந்தது தெரிந்ததே. அப்போது ஒருவர் காயம் அடைந்தார்.

நேற்றைய ஷெல் தாக்குதலின்போது தெய்வாதீனமாக எவரும் காயம் அடையவில்லை.

நேற்று மாலை 6 மணி அளவில் இச்சம்பவம் நடந்தது.

தொடர்ச்சியாக இப்பகுதியை நோக்கி மூன்று ஷெல் குண்டுகள் ஏவப்பட்டன. இரண்டு குண்டுகளே இக்கட்டடத்தின் மேல்விழுந்தன. மற்றைய குண்டு ஆஸ்பத்திரி வீதியில் உள்ள பாதுகாப்பு அரணுக்கு அருகாமையில் விழுந்து வெடித்தது.

மரக்கொப்புகளை முறித்து விழுந்த இந்தக் குண்டினால் வீதியில்

(4 ஆம் பக்கம் பார்க்க)



இன்று விஜயதசமி. வெற்றித் திருநாள். அதர்மமே வடிவான மகிஷாசுரனை தர்மமே வடிவான அன்னை மகா சக்தி வெற்றி கொண்ட வெற்றித் திருநாள். இது புராணக் கதை எனப் பலர் நினைப்பினும் காலத்துக்குக் காலம் நடப்பது.

ஈழத் தமிழர்களைப் பொறுத்த மட்டில் இப்போது அநீதிக்கும், உரிமைகள் வேண்டி நிற்கும் நீதிக்கும் இடையில் "போர்" நடந்து கொண்டிருக்கிறது.

தர்மமும், நீதியும் வெற்றிகூட காலம் பல ஆகலாம். ஆனால் வெற்றி அவற்றின் பக்கமே என்ற உறுதியை இந்தச் சித்திரம் தமிழர்களுக்கு மட்டுமன்றி அவர்களை ஒடுக்க நினைப்போருக்கும் எடுத்துக் காட்டும்.

அன்னை மகா சக்திக்கும், மகிஷாசுரனுக்கும் நடக்கும் தர்ம — அதர்மப் போரை பழம்பெரும் ஓவியர் திரு. வி. கனகலிங்கம், உதயன் வாசகர்களுக்குத் தத்ரூபமாகத் தந்திருக்கிறார்.

### நேற்று நாள் முழுவதும் விட்டு விட்டு

# யாழ் நகரில் 'ஷெல்' மாரி

# குழந்தை உட்பட மூவர் பலி

### சிப்பாய்கள் அடித்த மணி

வல்வெட்டித்துறை அக். 12

வல்வை இராணுவத்தினரும் சரஸ்வதி பூசை செய்கின்றார்களா?

இவ்விதம் மக்கள் கேட்கிறார்கள்.

நேற்றுக் காலை சுமார் 9-00 மணி அளவில் வல்வை இராணுவ முகாமுக்கு அண்மையில் உள்ள சுந்தரப் பெருமாள்

(4-ம் பக்கம் பார்க்க)

### புலிகள் ஏவிய 6 அங்குல மோட்டோ ஷெல்

யாழ்ப்பாணம், அக். 12

யாழ் கோட்டைக்குள் தமிழீழ விடுதலைப் புலிகளால் நேற்று 6 அங்குல மோட்டோ ஷெல்கள் ஏவப்பட்டன.

இது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கை வருமாறு:-

நேற்றுக் காலையிலிருந்து யாழ். கோட்டை இராணுவத்தினர் முகாமில் இருந்தவாறு மீண்

(4-ம் பக்கம் பார்க்க)

## வீடுகள், கடைகள் சேதமுற்றன; பல இடங்களில் புகை மண்டலம்

யாழ்ப்பாணம், அக்டோபர் 12

யாழ்ப்பாண நகரத்தில், நேற்றுக் காலை தொடக்கம் இரவு வரையும் - நாள் முழுவதும் - விட்டு விட்டு ஷெல் மாரி பொழியப்பட்டது.

கோட்டை இராணுவ முகாமிலிருந்து நடத்தப்பட்ட அந்தத் தாக்குதல்களினால், ஒரு வயதுக் குழந்தையும் மற்றும் இருவரும் பலியானார்கள்.

வீடுகள், கடைகள் பல சேதமடைந்தன, ஷெல் குண்டுகள் விழுந்த இடங்களில் ஒரே புகை மண்டலமாக இருந்தது.

யாழ். பஸ்நிலையப்பகுதி, சந்தைப்பகுதி என்பன வெறிச்சோடிக்கிடந்தன கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன சிவிலியன்கள் வின்சர் சந்தி, ஆமேகுளம் சந்தி ஆகிய இடங்களில் இருந்து சேவைகளை நடத்தின

வெள்ளிக்கிழமையன்று நகரில் நடைபெற்ற ஷெல் தாக்குதலின் விளைவாக யாழ் கோட்டை முகாமில் இருந்து நேற்றுக்காலை எட்டரை மணி அளவில் மீண்டும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

விட்டு விட்டு நாள் முழுவதும் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஷெல் குண்டுகள் கொட்டடி, பஸ் நிலையம், கே. கே. எஸ். வீதி, யாழ். செயலகம், மாட்டின்ரோட் ஆகிய பகுதிகளை நோக்கி ஏவப்பட்டன.

பயங்கர சத்தத்துடன் பரவலாக விழுந்து வெடித்த ஷெல் குண்டுகள் காரணமாக சுபாஸ் கபேக்குள் ஒருவரும், பஸ்நிலையத்தில் ஒருவரும் கொல்லப்பட்டனர். சுபாஸ்கபேக்குள் இறந்தவரின் தலை, குண்டு பட்டு பிளந்து போயிருந்தது.

ஷெல் தாக்குதல்களின் பயங்கர சத்தத்தினால் அதிர்ச்சி அடைந்த ஒரு வயதுக் குழந்தை ஒன்றும் மரணமானது.

பதினைந்துக்கும் அதிகமானோர் பலத்த காயங்

(4-ம் பக்கம் பார்க்க)

## 6 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர் என

### தமிழ் ஈழ ராணுவம் அறிக்கை

யாழ்ப்பாணம், அக். 12

நேற்று யாழ் நகரில் நடந்த சம்பவங்களின் போது ஆறு சிப்பாய்கள் கொல்லப்பட்டனர் என்று தமிழ் ஈழ ராணுவம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கை விவரம் வருமாறு:-

கோட்டை இராணுவத்தின் மிருகத்தனமான தாக்குதலிற்கு பதிலடி கொடுக்குமுகமாக நாம் மேற்கொண்ட அதிநவீன "ஆட்லறி" மோட்டோ ஷெல் தாக்குதலின்போது ராணுவத்தினரின் வடக்குப பக்க பாதுகாப்பு அரண் சின்னா பின்னப் படுத்தப் பட்டுதீப்பற்றி எரிந்தது

அவர்களது 6 அங்குல மோட்டர் நாசமாக்கப்பட்டதுடன் ஆறு ராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (இ)

### காயம் அடைந்தோர்

யாழ்ப்பாணம், அக். 12

நேற்றைய ஷெல் தாக்குதலில் காயமடைந்தோர் விவரம் வருமாறு:

(1) தவராசா இந்திரா (28 வயது) கையில் காயம், (2) தெய்வேந்திரம் மயில்ராணி (28 வயது) கை முறிந்தது (3) தெய்வேந்திரம் அஜிதா (2 வயது) (4) தெய்வேந்திரம் சுதன் குமார் (5 வயது) (5) ஞானசேகரம் மங்களதேவி (28 வயது) இவருக்கு காலில் காயம் (6) ரங்கேஸ்வரன் நிஷா

(4-ம் பக்கம் பார்க்க)



வல்வையிலே ஆலய மணி அடிக்கினம்; யாழ்ப்பாணத்திலே ஷெல் பூசை நடத்துகினம். அவையும் நேற்று ஆயுதபூசை நடத்தினவையோ.....!

### அடுத்தடுத்து விழுந்த ஷெல்கள்

யாழ்ப்பாணம், அக்.12

யாழ். கோட்டையில் அண்மையில்பொருத்தப்பட்ட நவீன ரக கருவி மூலமே நேற்று ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன என்று நம்பப்படுகிறது.

அடுத்தடுத்து ஐந்து

(4-ம் பக்கம் பார்க்க)

### இறந்தோர் விவரம்

யாழ்ப்பாணம், அக். 12

நேற்றைய ஷெல் தாக்குதல் காரணமாக மரணமானோர் விவரம் வருமாறு;

காளிமுத்து கருப்பையா சிவன்கோவிலடி,

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

12-10-1986
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
9.02 முதல் 10.32 வரை
ராகுகாலம்:
4.32 முதல் 6.02 வரை
இவை பகலுக்கும்இரவுக்கும் பொருந்தும்
விஜயதசமி
வித்தியாரம்ப தினம்

உதயனின் சிறப்புச் செய்தி

# ஸ்ரீலங்காவுக்கு அமெரிக்கராணுவ உதவி

### நிக்கரகுவா கெரில்லாக்களுக்கு வழங்கப்படும் அதே பாணியில்

வாஷிங்டன், அக். 11

ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு அமெரிக்கா இராணுவ உதவி வழங்கும். இது குறித்து உத்தியோகபூர்வமாக இங்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நிக்கரகுவா கெரில்லாக்களுக்கு இராணுவ உதவி வழங்கப்படும் அதே வசதி, சலுகை, நிபந்தனைகளுடன் ஸ்ரீலங்காவுக்கும் இராணுவ உதவி கிடைக்கும்

இதற்காகஅமெரிக்காவிடமிருந்து உதவி பெறும் நாடுகள், அமைப்புக்கள் அடங்கிய பட்டியலில் இலங்கையையும் அமெரிக்க அரசாங்கம் சேர்த்துள்ளது.

அமெரிக்க வெளிநாட்டு உதவித் திட்டத்தின் 571, 572 ஆவது பிரிவுகளின் கீழ் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கான இராணுவ உதவிகள் அனைத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய நிலையை டிக்ஸிற் ஜே.ஆருக்கு நேற்று விளக்கினர்

கொழும்பு, அக். 12

இந்திய அரசு அதிகாரிகளும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களும் நடத்திய சந்திப்புக்களைத் தொடர்ந்து உருவான மாற்று யோசனைகள், மூன்றும் கட்டப் பேச்சுக்களில் தமிழர் அமைப்புக்கள் கலந்துகொள்ளஉதவுமா என்பது பற்றி இந்தியா தற்பொழுது பரிசீலனை செய்துவருகின்றது.

கடந்த வெள்ளி இரவு

(4-ம் பக்கம் பார்க்க)

## செயலகம் வரை வந்த ஷெல்!


யாழ்ப்பாணம், அக். 12

யாழ் செயலக வளவுக்குள்ளும் நேற்று ஷெல் ஒன்று விழுந்து வெடித்தது.

செயலக ஜன்னல் கண்ணாடிகள் உடைந்து நொருங்கின. கட்டடங்களும் சிறிது சேதமடைந்தன.

நேற்றுமாலை மூன்று மணியளவில் இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

செயலக கேற்றுக்கு அருகில் உட்புறமாக இந்த ஷெல். விழுந்தது. (இ-10)



போர் நிதிக்கான அதிஷ்டலாபச் சீட்டு விற்பனை வெள்ளிக்கிழமை மாலை ஆரம்பித்து வைக்கப்பட்டது. முதலாவது லாபச்சீட்டை தமிழ் ஈழ இராணுவத்தின் ஈழத் தளப் பொறுப்பாளர் திரு. நந்தனிடம் இருந்து யாழ். பேராலய கட்டளைக் குரவர் பிதா ஜெபநேசன் பெற்று ஆசீர்வாதம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

அறிவித்தல்
(பெயர் மாற்றம்)
கடந்த பல காலங்களாக
INTERSUN GROUP
என்ற பெயரில் பிரயாண ஒழுங்குகளை மேற்கொண்டுவந்த எமது ஸ்தாபனம்
8-10-86 (புதன்கிழமை)
தொடக்கம்
GLORIA TRAVELS
என்ற புதிய பெயருடன் இயங்கும் என்பதை சகலருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.
GLORIA TRAVELS
சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# J.C.C.
## உங்களை அன்புடன் அழைக்கின்றது!

வாடகைக்குத் தகரப்பந்தல்கள், இரும்புக் கதிரைகள், விற்பனைக்கு சகலவிதமான கட்டிடப் பொருட்கள், மின்சார உபகரணங்கள், குளியலறைப் பொருட்கள், உரவகைகள், பெயின்ற் வகைகள், கிருமிநாசினிகள், புதிய காய்கறி விதைகள், சைக்கிள்கள், சைக்கிள் உபகரணங்கள், மோட்டார் சைக்கிள் உபகரணங்கள் சகலவிதமான Fancy Goods, எவர்சில்வர் பாத்திரங்கள், பாடசாலை உபகரணங்கள், கைவேலைப் பொருட்கள், விளையாட்டுச் சாமான்கள், பிளாஸ்ரிக் சாமான்கள், T.V. அன்ரனா உபகரணங்கள் மற்றும் பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் உற்பத்திப் பொருட்களான கூடைகள், ஜாம், கோடியல், பனங்கட்டி

இன்னும் பல அத்தியாவசியமான பொருட்களுக்கு நாடவேண்டிய ஸ்தாபனம்

## J.C.C. நிறுவனம்

உரும்பராய்ச் சந்தி,
உரும்பராய்.


உணவுப் பொருள்களை எடுத்துச் செல்லத் தடை

# கும்புறுபிட்டி அகதிகள் பட்டினியில்வாடும் நிலை

திருமலை, அக்.12

இராணுவத்தின் புதிய உத்தரவினால் கும்புறுப்பிட்டியிலுள்ள 399 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் ஆயிரத்து அறுநூறு பேர் பட்டினியால் வாடுகின்றனர்.

இவர்களில் 99 குடும்பங்கள் திரியாய், குச்சவெளி, பன்குளம், கன்னியா, கும்புறுப்பிட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்கள். ஏனைய 300 குடும்பங்களும் கும்புறுப்பிட்டிக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்.

99 அகதிக் குடும்பங்களுக்கும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வந்த நிவாரண உதவிகள் ஆகஸ்ட் மாதம் முதல் நிறுத்தப்பட்டுள்ளன.

கடந்த ஒரு மாத காலத்திற்கு மேலாக இக்குடும்பங்களுக்கு எதுவித நிவாரணமும் வழங்கப்படவில்லை. இந்து இளைஞர் பேரவை போன்ற பொது ஸ்தாபனங்களின் உதவியுடனேயே இக்குடும்பங்கள் காலம் கழித்து வந்தன.

கடந்த 21 ஆம் திகதி முதல் திருமலை நகரிலிருந்து எதுவிதமான உணவுப் பொருட்களையும் கும்புறுப்பிட்டிக்கு எடுத்துச் செல்வதற்கு இராணுவம் அனுமதியளிக்கவில்லை.

3 ஆம் கட்டையிலுள்ள இராணுவ முகாமைக் கடந்துதான் சாம்பல்தீவு, நிலாவெளி, கும்புறுப்பிட்டி ஆகிய கிராமங்களுக்குச் செல்ல வேண்டும். ஆகவே அப்பகுதி மக்கள் திருமலைக்கு கால் நடையாகவோ சைக்கிளிலோ வந்து பொருட்களை எடுத்துச் சென்று வந்தனர்.

21 ஆம் திகதி இராணுவம் திடீரென்று உணவுப் பொருட்களை எடுத்துச் செல்வதற்குத் தடை விதித்ததையடுத்து அப்பகுதி மக்கள் பட்டினியால் வாடுகின்றனர்.

ஒரு கிலோ அரிசி, ஒரு கிலோ மா, பாண் ஆகியவற்றைக் கூட எடுத்துச் செல்ல விடவில்லையாம்.

சிலர் கொண்டு சென்ற பொருட்கள் பறித்து வீசப்பட்டதாக அறியப்படுகிறது.

இது தொடர்பாக பிரசைகள் குழுவிற்கு முறையிட்டதையடுத்து அவர்கள் இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டனர்.

தீவிரவாதிகளுக்கு உணவுப் பொருள்கள் கொடுக்கப்படுவதாகவும் அதனால்தான் இந்தத் தடை விதிக்கப்பட்டதாகவும் அப்போது தெரிவிக்கப்பட்டது.

ஒருவர் தம்முடன் தனக்குத் தேவையான பொருள்களை மட்டும் கொண்டு செல்வதற்கு அனுமதியளிப்பதாகவும் அப்போது தெரிவிக்கப்பட்டது. (உ-150)

அகதிகளுக்கான உதவிவழங்கலை கண்காணிக்க

# பொதுநல ஸ்தாபனங்களுக்கு பிரசைகள் குழுக்கள் உதவும்

யாழ்ப்பாணம், அக். 12

அகதிகள், இடம் பெயர்ந்தோர், வன்செயல்களால் பாதிக்கப்பட்டோருக்கான உதவிகள் வழங்குவதில் நடைபெறும் ஏமாற்று இழுமுறிகளைக் கண்காணிப்பதற்கு குழுக்கள், பொதுநல ஸ்தாபனங்களுக்கு பிரஜைகள் குழுக்கள் முன்நின்று உதவும்! என பிரஜைகள் குழுக்களின் ஒன்றிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

சிறிய சங்கங்கள் சில தத்தமது வகுதி பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதாக கூறி பொதுஸ்தாபனங்களிடம் உதவி பெற்று சில ஏமாற்று வேலைகளையும் தில்லுமுல்லுகளையும் செய்கின்றனர்.

இப்படிப் பெறப்படும் உதவிகள் சில சமயங்களில் உண்மையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு சென்று சேருவதில்லை.

இப்படியான தில்லுமுல்லுச் சம்பவங்கள் பற்றிய செய்திகள் சில பத்திரிகைகளிலும் வந்திருந்தன.

எனவே பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ முன்வரும் பொதுநலஸ்தாபனங்களுக்கு: உதவிகள் உரியவர்களுக்கு சேரும் தற்கான ஒத்துழைப்பை பிரசைகள் குழுக்கள் வழங்க வேண்டும் எனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (இ-ஏ)

மீண்டும் குடியமர்வதற்கு

## ராணுவ அதிகாரியின் அனுமதி தேவையில்லை கட்டுப்பாடு தளர்த்தப்பட்டது

யாழ்ப்பாணம், அக்.12

செட்டிகுளம் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் மீண்டும் குடியமர்வதற்கு முதல் கிராமசேவையாளருடன் சென்று வவுனியா இராணுவ அதிகாரியின் அனுமதியைப் பெறவேண்டும் என்ற உத்தரவு ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

அந்த உத்தரவை ஆட்சேபித்து கொழும்பில் உள்ள அமைச்சு அதிகாரிகளுக்கு வவுனியா அரச அதிபர் திரு. கே. சி. லோகேஸ்வரன் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து இந்த உத்தரவு ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

மடுக்கோவில் பகுதியில் உள்ள செட்டிகுளம் அகதிகள் எதுவித நிபந்தனைகளும் இன்றி மீண்டும் செட்டிகுளம் சென்று வாழலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களை மீளக் குடியமர்த்தும் பணியில் வவுனியா, மன்னார் அரச அதிபர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இராணுவ அதிகாரியின் உத்தரவு பெற வேண்டும் என்ற நிபந்தனை காரணமாக மீளக் குடியமர்த்தும் முயற்சி தடைப்பட்டிருந்தது. (உ-எ)


ஈழத்தின் தமிழ் இதயங்களுக்கு ஓர் இனிமையான செய்தி!

## ரெலிபோன்-ரெலக்ஸ் சேவைகள்

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழ்கின்ற உங்கள் உறவினர்களை அவ்வவ்விசைகளில் அழைத்து உடனுக்குடன் தெளிவான குரலில் உரையாட குறைந்த செலவில் நிறைவான சேவை செய்ய முன்வந்துள்ளனர்

## மைக்ரோ கொம்யூனிக்கேசன்

ஸ்தாபனத்தார்

ரெலிபோன் ரெலக்ஸ் சேவையில் பல வருட கால அனுபவம் பெற்றவர்களின் தொழில் நுட்ப கண்காணிப்பின் கீழ் தங்கள் உன்னத சேவையை இரவு பகல் 24 மணி நேரமும் வழங்குகின்றார்கள்.

உங்கள் தேவையே எங்கள் சேவை

## மைக்ரோ கொம்யூனிக்கேசன்

கே.கே.எஸ். வீதி,
குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.


# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

# நீரிழிவு நோய்க்கான அறிகுறிகள் எவை?

## கருத்தரங்கில் விளக்கம்

இளவாலை அக. 12

சிறுநீரில் சீனி கூடப்போனால் மட்டும் நீரிழிவு என்ற முடிவுக்கு வந்து விடக் கூடாது. இரத்தத்திலும் சீனி இருந்தால் தான் ஒருவரை நீரிழிவு ரோகி என்று கூறலாம். நீரிழிவு நோயாளிகளுக்கு அடிக்கடி சிறுநீர் போகும். தாகம் ஏற்படும்.

யாழ் போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதி ஜேம்ஸ் மேற்கண்டவாறு கூறினார்.

மாவிட்டபுரம் லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் நீரிழிவுக் கருத்தரங்கு ஒன்று இளவாலை சென் ஹென்றீஸ் கல்லூரியில் நடைபெற்றது.

வைத்திய கலாநிதி சரவணபவானந்தன் மங்கள விளக்கேற்றி கருத்தரங்கை ஆரம்பித்து வைத்தார்.

கழகத் தலைவர் லயன் பி. ஜே. அந்தோனிப்பிள்ளை வரவேற்புரை நிகழ்த்தினார். கல்லூரி அதிபர் அதிவண அன்ரன் இராசநாயகம் லயன்ஸ் கழகத்தின் நற்பணிகளைப் பாராட்டினார்.

வைத்திய கலாநிதி ஜேம்ஸ் தொடர்ந்து பேசுகையில்;

வெளிப் பார்வையில் உடல் மெலிவும் தென்படும்.

உள்ளாக இருதயம் மூளை, நரம்பு, கண் பார்வை, சிறுநீரகம் முதலியன தாக்கப்படலாம். இதனின்றும் விடுபட உடல் உழைப்புக்கேற்ப உணவளவில், சீனிப்பதார்த்தங்களைத் தவிர்த்துப் புரதநிறைவுள்ள பருப்பு, கடலை, பயறு, வெள்ளைக் கரு, முட்டை, கொழுப்பு நீக்கிய இறைச்சி, கீரை வகைகள் முதலியவற்றைக் கட்டாயமாகச் சேர்க்கவேண்டும் ஆகக் குறைந்த சீனிச்சத்துள்ள பப்பாளிப்பழம் மிகவும் நல்லது என்றார்.

கருத்தரங்கிற்குத் தலைமை வகித்த வைத்திய கலாநிதி சரவணபவானந்தன் தமதுரையில் நீரிழிவு நோயாளிகளுக்கு 50 வயதின் மேல் கண்பார்வை, நரம்புத்தளர்ச்சி போன்ற தாக்கங்கள் ஏற்படும் என்றார். அடுத்துப் பேசிய வைத்திய கலாநிதி நாகநாதன் இந்நோய் 4000 ஆண்டுகளுக்கு முன்னர் எகிப்து தேசத்தில் ஆரம்பமாகி 17 ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் பரவியது என்றார். இந்நோய்க்கு மருந்து மாத்திரமின்றி உணவுக் கட்டுப்பாட்டின் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

இன்சுலின் குறைவினால் உறுப்புக்கள் வேலை செய்ய முடியாத நிலையையும் அவயவங்களின் தொழிற்பாடு சீர்கெடுவதையும் படத்தின் மூலம் அவர் விளக்கமளித்தார்.

யாழ் பல்கலைக் கழகம் மருத்துவ பீடத்தைச் சேர்ந்த திருமதி சரவணபவானந்தன் நீரிழிவுக்கான சிகிச்சை முறைகளைப் பற்றியும் சாதாரணமாக ஒருவர் எப்படித் தன்னைப் பரீட்சித்துக் கொள்ளலாம் என்பது பற்றியும் எடுத்துரைத்தார்.

யாழ் போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதி பொன்னம்பலம் சத்திர சிகிச்சை சம்பந்தமாக இரத்தினச் சுருக்கமாக விளக்கிக் கூறினார்.

நீரிழிவு பற்றிய சந்தேகங்களுக்கு கேள்வி பதில் மூலம் விளக்கம் அளிக்கப்பட்டது.

கேள்வியொன்றுக்குப் பதில் அளித்த வைத்திய கலாநிதி ஜேம்ஸ் நீரிழிவு பரம்பரை வியாதிதான் ஆனால் ஒரு சந்ததியினர் பாதிக்கப்படாமல் அடுத்த சந்ததியினரைப் பாதிக்கும் முறையுமுண்டு. சக்கரை பாவிப்பதால் புற்றுநோய் வருவதற்கு சிறிதளவு சாத்தியமே உண்டு. குளுக்கோஸ் தான் மிகச் சிறந்தது. 'ஹேமா செட்டாஸ்' என்ற இலிப்புக் குளிகை தற்சமயம் நடைமுறையில் உள்ளன. வெளிநாட்டில் விஞ்ஞானத்தின் முன்னேற்றத்தினால் தேவையானளவு இன்சுலினை தானாகவே உடம்பில் சேர்க்கக் கூடிய கருவிகளும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன என்றார். (இ-48)

### சிரமதானம்

25 ஆயிரம் ரூபா பெறுமதியான நீர்த்தொட்டி, குழாய் நீர் விநியோகத் திட்ட வேலைகள் உரும்பராய் ஜேர்மன் கத்தோலிக்க வித்தியாசாலையில் சிரமதானம் மூலம் செய்து முடிக்கப்பட்டுள்ளது. (இ-11

## நிறை குறைந்த குழந்தைகள் பிறக்கக் காரணம் என்ன?

யாழ்ப்பாணம், அக். 12

கர்ப்பத் தாய்மார்களின் மந்த போசணை காரணமாக அநேகமான சந்தர்ப்பங்களில் நிறை குறைவான குழந்தைகள் பிறக்கின்றன.

"குழந்தைகள் போஷாக்கும் உடல், உள விருத்தியும்" என்ற தலைப்பில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய டாக்டர் ஏ சோமசுந்தரம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கருத்தரங்குக்கு [illegible] தலைமை வகித்தார். பேராசிரியர் த இராமநாதன், செல்வி கலாவதி இரத்தினராஜா ஆகியோர் ஆக்கிய "பிள்ளைகளின் உணவும், உள வளர்ச்சியும்" என்ற கைஏடும், மனோ வைத்திய நிபுணர் டாக்டர் ஏ. செல்வரத்தினத்தின் சிறுவரிடம் காணப்படும் மனோரீதியான குறைபாடுகள் என்ற நூலும் இவ்வைபவத்தில் வெளியிடப்பட்டன.

டாக்டர் சாக்கிய சோதி ஜோசப், மானிப்பாய் மருத்துவ அதிகாரி டாக்டர் வி. சிறிகாந்தா, முன்னாள் லயன்ஸ் தலைவர் திரு கே. குணரத்தினம் ஆகியோரும் உரையாற்றினர். [illegible] தேவராசா நன்றி கூறினார். (இ-9)

### சாம்பல் தீவில் ஐவரைக் காணோம்

திருகோணமலை, அக். 12

ஆயுதப்படையினர் நடத்திய சாம்பல் தீவு, சல்லி முற்றுகையின் போது 5 தமிழர்கள் காணாமற் போய்விட்டனர் என்று திருமலைப் பிரசைகள் குழுவுக்கு நேற்று முறையிடப்பட்டது.

காணாமற் போனவர்களின் மனைவிமார்களே முறைப்பாட்டைச் செய்தனர்.

காணாமற்போன ஐந்து பேரின் பெயர்கள் வருமாறு;

1. முருகேசு நடராசா, 2. தம்பு நாகமுத்து, 3. ராசா தம்பிப்பிள்ளை, 4. புலேந்திரன் சுதாகரன், 5. சண்முகராசா ஜெயகுமார் (இ-எ-150)

### மக்கள் முகம்

### பனை வர்த்தகர் சங்கம்

யாழ்ப்பாணம், அக்.12

பனை வர்த்தகர் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் திரு. சி. பாலசுந்தரம் தலைமையில் பனை மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

சங்க நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்: திரு. கொ. சுப்பிரமணியம் செயலாளர்: திரு. வை வேலாயுதம் பொருளாளர்: திரு. க பொன்னையா

9 பேர் கொண்ட செயற் குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (இ-எ)

### அந்த இளம் எம். பி. பற்றி விசாரணை

கொழும்பு, அக். 12

அண்மையில் நடந்த முன்னாள் அமைச்சர் சிறில் மத்தியூவின் வைபவத்தில் கலந்து கொண்ட தென்னிலங்கையைச் சேர்ந்த இளம் ஆளும் கட்சி எம். பி. ஒருவர் பற்றி ஐ தே. க மேலிடம் விசாரித்து வருகின்றது

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் இந்த இளம் எம் பி யின் நடவடிக்கை எப்படி அமையும் என்பது குறித்து ஆளும் கட்சி வட்டாரங்கள் விசாரித்து வருகின்றன. (இ - ஐ -எ)


## பிரயாண ஒழுங்குகள்

● டென்மார்க் ● ஜேர்மனி
● குவைத்
● சவூதி அரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது பிரயாண மூலம் சென்ற வார பயணங்களை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளார். இதுவரை எமது பல பயணங்கள் வெற்றிகரமாகவும் விரைவாகவும் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனிக்குச் செல்ல விரும்பும் பெண்கள் (குறிப்பாக மணம் செய்தவர்கள், மணம் செய்யவிருப்பவர்கள்) உங்களை எமது மூலம் நேரடியாக அழைத்துச் செல்வார்.

குவைத்துக்கு Airport Cleaners (எயார்போட் கிளீனேர்ஸ்) ஆக செல்ல விரும்புபவர்கள் நேரடியாக பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்பு கொள்ளவும்

சவூதி அரேபியாவிற்கு வீடு வேலைக்கு விரைவாக அனுப்பிவைக்கப்படுவார்கள் உடன் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்புகொள்ளவும்.

பதி இல: 764
பலாலி வீதி,
கோண்டாவில்
கிழக்கு.

தொடர்பு:
N. பாலா
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

* உங்கள் நன்மை கருதி நீர்வேலி பகுதியில் ஒமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் என்னும் பெயரில் [illegible] சந்தியில் அமைந்துள்ளது
* [illegible] சந்திக்கு அருகாமையிலும் ஒமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

## பிரயாண ஒழுங்குகள் குவைத்

எல்லாவிதமான வசதிகளுடன் பிரயாண ஒழுங்குகள் உடன் செய்து தரப்படும். போக விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

மற்றும்
பாஸ்போட், பொண்ட், விசா, ரிக்கற் ஆகிய ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

SUPERB RANK,
PALALY ROAD, THIRUNELVELY,
JAFFNA.

## ★ உயிர் காக்கும் சஞ்சீவி

இன்றைய இக்கட்டான காலகட்டத்தில் உங்கள் உடன் பிறப்புக்களின் உயிர்கள் விலைமதிக்க முடியாத, திரும்பப் பெற இயலாத மாபெரும் சொத்துக்கள்.

மரணத்துடன் போராடுபவரை நீங்களும் காப்பாற்றலாம்

உயிர் காப்பது உன்னத பணி

## யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கி

உங்கள் வரவை எதிர்பார்த்து நிற்கிறது!

இரத்த தானம் செய்யுங்கள்!
விரைந்து செய்வீர்!!
தொடர்ந்து செய்வீர்!!!

தானத்தில் சிறந்தது இரத்ததானம்

## GLORIA TRAVELS

● கனடா ● டென்மார்க்
● பிரான்ஸ் ● ஜேர்மனி

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன்

டென்மார்க், கனடா செல்வதற்கு உடனடி பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும்.

மற்றும்
பாஸ்போர்ட், பொண்ட் (BOND), விசா, ரிக்கற் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

## GLORIA TRAVELS

சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

ஒருவரோடு ஒருவர் கலந்து பேசி, அச்சத்தைப் போக்கி, பொறுமையைப் பெருக்கி, தீய எண்ணங்களை விட்டு, ஆன்மீகத்துறையில் பற்று ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

—காஞ்சிசுவாமிகள்


# உதயன்

இல, 15 [illegible] ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24806, 22073

12-10-1986 த. பெ. இல.23


## அகதிகளுக்கு நிவாரணம்: புதிய சூழ்ச்சியும், சவாலும்

முல்லைத்தீவு மாவட்டத்தில் தஞ்சம் புகுந்துள்ள தமிழ் அகதிக் குடும்பங்களில் சில மேட்டு நிலப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வகையில் சுமார் 1235 தமிழ் அகதிக் குடும்பங்களை ஆயிரம் ஏக்கரில் நிலக்கடலை பயிரிடும் திட்டத்தில் ஈடுபடுத்த முடிவாகி இருக்கிறது. இதற்கான சகலவித உதவிகளையும் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் செய்ய முன்வந்துள்ளது. இப்படி ஒரு பெரிய விவசாயத் திட்டத்தைச் செயற்படுத்த முன்வந்த அகதிகள் புனர் வாழ்வுக் கழகத்தைப் பாராட்டலாம்.

அரசாங்க பயங்கரவாதத்தினால் அகதிகளாகும் நிலைக்குத் தமிழ் மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். கடந்த மூன்று வருட காலத்தில் லட்சக் கணக்கான தமிழர்கள் தமது சொந்தக் கிராமங்களை விட்டு அரசாங்கப் படையினரால் விரட்டியடிக்கப்பட்டிருக்கின்றனர். தமது உயிருக்கு அஞ்சி, தாம் பிறந்து வளர்ந்த பிரதேசங்களில் சொத்துக்கள் உடைமைகள் யாவற்றையும் விட்டுவிட்டு வேறு இடத்தில் புகலிடம் தேட வேண்டிய நிர்க்கதி எத்தனையோ தமிழர்களுக்கு.

இயற்கை அனர்த்தங்களால், மற்றும் குழப்பங்களால் அகதிகளானோருக்கு உதவ வேண்டியது அந்தநாட்டு அரசாங்கத்தின் கடமை. ஆனால் தமிழ் அகதிகளைப் பொறுத்த மட்டில் ஸ்ரீலங்கா அரசாங்கம் எப்போதும் மாற்றாந்தாய் போக்கையே கடைப்பிடித்து வருகின்றது.

சிங்கள அகதிகளுக்கு உடனடி நிவாரணம் தாராளமாக வழங்கப்படுகின்றது. அத்தோடு நீண்ட கால நிவாரணத் திட்டங்களும் நிரம்பிய அளவில் செயற்படுத்தப்படுகின்றன.

ஆனால் தமிழ் அகதிகளுக்கோ பாதிப்படைந்த பின்னர் மூன்று வாரங்களுக்கு நிவாரண உணவுப் பொருள்கள் வழங்குவதோடு தனது பணி முடிந்து விட்டதாக அரசாங்கம் நினைக்கின்றது.

அதற்குப் பின்னர் உணவுப் பொருள்களை நிவாரணமாக வழங்குவதற்குக் கூடப் பல நிபந்தனைகளை விதிக்கிறது, பல கேள்விகளைக் கேட்கிறது. பல காரணங்களைக் கூறி நிவாரண உதவியை நிறுத்துகிறது.

பாதிப்பு ஏற்பட்ட உடனடியாக, தற்காலிகமாக நிவாரணம் வழங்குவதற்கே தர்பார் நடத்தும் அரசு, தமிழ் அகதிகளுக்கு நீண்ட கால நிவாரணத் திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தும் என்று எவரும் எதிர்பார்ப்பதற்கு இல்லை.

அகதிகளாகி விட்ட தமிழர்கள் வருமானம் எதுவும் இன்றி நீண்ட காலம் முகாம்களிலோ அல்லது தஞ்சம் புகுந்த இடங்களிலோ முடங்கிக் கிடக்க முடியாது.

அவர்கள் தமக்கென ஒரு தொழிலைத் தேடிக் கொள்வது அவசியம். அப்போதுதான் அவர்கள் மற்றவர்களுக்குப் பாரமின்றித் தமது உண்டியையாவது நிரப்ப முடியும்.

அதற்கேற்ற விதத்தில் அவர்களுக்குத் தொழில் வாய்ப்புப் பெற்றுக் கொடுப்பதற்கு நீண்ட கால நிவாரணத் திட்டங்கள் அவசியம். அந்த வகையில் முல்லைத்தீவு ஆயிரம் ஏக்கர் மேட்டுப் பயிர்ச் செய்கைத் திட்டம் ஒரு முன் மாதிரி என்று கூறலாம்.

ஆனால் அவ்வாறான பல பெரிய திட்டங்களைச் செய்வதற்கு அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் போன்ற தொண்டர் ஸ்தாபனங்களிடம் போதிய நிதி வசதி உண்டா என்பது கேள்விக்குரியதாகும்.

வெளிநாடுகளில் உள்ள சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்களுக்குத் தமிழ் அகதிகள் நிலையைச் சரிவரப் புரியச் செய்து, நிதி உதவி பெறுவதிலேயே உள்நாட்டிலுள்ள தொண்டர் ஸ்தாபனங்களின் திறமை தங்கியுள்ளது.

அதுமட்டுமல்ல. தமிழர்களுக்கு உதவும் தொண்டர் ஸ்தாபனங்களை அவ்வாறு செய்ய வேண்டாம் என்று தடுக்கவும் அரசு முயற்சிக்கலாம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வெளிநாட்டவர்களின் நடமாட்டத்தைக் கண்காணிக்கப் போவதாக வெளிவந்திருக்கும் செய்தி அதன் ஆரம்பமாக இருக்கலாம்.

போராளிகளுக்கு உதவுகிறார்கள் என்று ஒரு புனைகாரணத்தைக் காட்டித் தமிழ் அகதிகளுக்குக் கிடைக்கும் வெளிநாட்டுத் தொண்டர் ஸ்தாபனங்களின் உதவியை நிறுத்துவது அரசாங்கத்துக்குப் பெரிய காரியமல்ல.

எனவே தமிழ்ப் பகுதிகளில் உள்ள—குறிப்பாகத் தமிழ் அகதிகளுக்கு உதவும்- தொண்டர் ஸ்தாபனங்கள் அரசாங்கத்தின் இந்தப் புதிய சூழ்ச்சியை முறியடிக்கும் விதத்தில் செயலாற்ற வேண்டும். உண்மையில் இது அவற்றுக்கு ஒரு சவால் என்றும் கருதலாம், அந்தச் சவாலை எதிர்நோக்கி முறியடிப்பதில்தான் இங்குள்ள தொண்டர் ஸ்தாபனங்களின் கெட்டித்தனம் உண்டு.

## பாதிப்புற்ற அரச ஊழியருக்கு விசேட முற்பணம்

மன்னார், அக் 12

மன்னார் அரசாங்க அதிபர் எம். எம். மக்பூல் அவர்களின் முயற்சினால் பொது நிர்வாக அமைச்சின் அனுமதியைப் பெற்று கடந்த செப்டம்பர் மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 5ஆம் திகதி வரை மன்னாரில் நடந்த அசம்பாவிதங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# எல் சல்வடோரில் பயங்கர பூமி அதிர்ச்சி

## பலர் பலி: 90 சடலங்கள் மீட்பு

சான்சல்வடோர், அக் 11

எல்சால்வடாரில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சியில் பலர் பலியாகியுள்ளனர்.

பல கட்டிடங்கள் இடிந்து விழுந்தன. இடிபாடுகளிடையே இருந்து ஏற்கனவே 50 சடலங்கள் கிடைத்துள்ளதாகவும் மேலும்பல சிதைவுகளில் சி[illegible]கியிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

தலைநகர் சான்சல்வடோரின் ஒரு பகுதிதான் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

நேற்று காலை 11-30 மணிக்கு ஏற்பட்ட இந்தப் பூமி அதிர்ச்சி சுமார் 10 நிமிடங்களுக்கு நீடித்தது.

எல்சல்வடோரில்நெருக்கடி நிலையை ஜனாதிபதி ஜோஜ்துலாட்டே பிறப்பித்துள்ளார்.

அயல் நாடுகளான கெளதமாலாவிலும் ஹெண்டுராஸிலும் பூமி அதிர்ச்சி உணரப்பட்டது. (ஒ)

### அவாமிலீக் தலைவி மீது வழக்கு தாக்கல்

டாக்கா, அக் 11

பங்களாதேஷில் எதிர்க்கட்சித் தலைவியான அவாமிலீக் கட்சி தலைவி காஸினாவாஹிட் மீது அண்மையில் பிறப்பிக்கப்பட்ட இராணுவத் தடை உத்தரவை மீறியதாகப் பொலீஸார் வழக்குத்தாக்கல் செய்தனர்.

வரும் புதன்கிழமை நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல்களுக்கு எதிராக காஸினா மேடையில் பேசியதாகவே குற்றம் சுமத்தப்பட்டது. (ஒ)

### வைன்பேகர் இந்தியா விஜயம்

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் வைன் பேகர் மூன்று நாள் பயணம் மேற்கொண்டு இந்தியாவிற்கு இன்று வருகின்றார்.

இந்தியாவிற்கு வரும் முதலாவது அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் இவராகும். (ஒ)

## வெளி உலகில்

### அணு ஆயுத அச்சம் நீங்க நடவடிக்கை

ரிஜாவிக், அக். 11

ரஷ்யாவிலிருந்து மட்டுமல்ல உலகிலிருந்தே அணு ஆயுதப் போர் அச்சுறுத்தலை அகற்றுவது பற்றி ஜனாதிபதி றேகனுடன் கலந்தாலோசிக்கப்படும்.

இவ்வாறு ஐஸ்லாந்தில் நேற்றுமாலை வந்திறங்கிய ரஷ்ய ஜனாதிபதி மிக்கெயில் கோபர்சேவ் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதியும் ரஷ்ய ஜனாதிபதியும் இன்று சந்திக்கின்றனர்.

அமெரிக்க ஜனாதிபதி ஏற்கனவே அங்கு போய் சேர்ந்துள்ளார் (ஒ)

### ஆப்கானில் நவீன இரசாயனக் குண்டுகள்

காபூல், அக்.11

ஒரு இரசாயன யுத்தம் நடத்துவதற்கு வேண்டிய மிக நவீனமான இரசாயன ஆயுதங்கள் ஆப்கான் முஜாதீன் கலகக்காரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வகையான ஆயுதங்கள் இன்னமும் நேரிடையாக இராணுவத்துக்கே கிடைக்கவில்லை என ஆப்கான் அரசு அறிவித்தது.

கொடிய நஞ்சுப் பொருட்கள் அடங்கிய இரசாயனக்கண்ணி வெடிகளையும் கைக்குண்டுகளையும் ஆப்கான் படையினர் ஏராளமாகக் கைப்பற்றியதைத் தொடர்ந்து இத்தகவல்கள் வெளியிடப்பட்டன.

இக்குண்டுகள் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டதாகவும் அத்தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ)

### ஷாமீர் பதவி ஏற்பு

தெல்அவிவ், அக்.11

இஸ்ரவேலில் தமது கூட்டணியைச் சேர்ந்த ஷாமிர் பிரதமர் பதவியை ஏற்பதற்கு வசதியாக இப்போதைய பிரதமரான ஷிமோன் பெரஸ் தமது பதவியை ராஜினாமா செய்தார்.

ஷாமிர் செவ்வாய்க்கிழமை முறைப்படி பிரதமர் பதவியை ஏற்பார்.

இதுவரை காலமும் ஷாமிர் வகித்து வந்த வெளிநாட்டமைச்சர் பதவியை இனி ஷிமோன் பெரஸ் தனதாக்குவார்.

கனவான்கள் ஒப்பந்த உடன்படிக்கையின் படியே இந்த பதவி மாற்றம் இடம் பெறுகின்றது. (ஒ)

### 86 பேர் பலி

டாக்கா, அக். 11

பங்களாதேஷில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் இறந்தவர்கள் தொகை 86 ஆக உயர்ந்துள்ளது.

பங்களாதேஷில் 64 மாவட்டங்களில் 25 ல் சுமார் 80 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றார்கள். (ஒ)

# அன்னையின் ஆராதனை

## அநாதியானது

வரலாற்று நோக்கில் அவதானிக்கும் பொழுது அன்னையைத் தெய்வமாக வழிபடும் முறை மிகப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ஆரம்பித்து விட்டதாகச் சேர் ஜோன் மார்ஷல் போன்ற தொல்பொருளாராய்ச்சியாளர்கள் ஆதார பூர்வமாக நிரூபித்துள்ளனர். அன்னையைத் தெய்வமாக வழிபடும் முறை நாகரிகத்திற்கு முற்பட்ட கற்காலத்திலேயே தோன்றி விட்டதாகவும் கூறுவர்.

**நவராத்திரி சிறப்பம்சம்**

அக்கால சமுதாய அமைப்பில் இல்லத் தலைவியராக மட்டுமன்றி எல்லா விடயங்களிலும் தீர்மானங்கள் எடுப்போராகவும் தலைமை தாங்கும் தகுதி பெற்றோராகவும் பெண்களே முக்கியத்துவம் பெற்றிருக்க வேண்டுமென்றும் அதனால் ஆற்றல் படைத்த அனைத்தையும் பெண் வடிவமாகவே கண்டு வணங்கியிருக்க வேண்டுமென்றும் கொள்ள முடிகிறது.

உலகின் பழம் பெரும் நாகரிகங்களில் தலைசிறந்ததென உலக வரலாற்றாசிரியர்களால் பேசப்படும் சிந்து வெளி நாகரிகத்தின் மையமாக விளங்கிய மொஹஞ்சதாரோ, ஹரப்பா என்ற வட இந்திய மாநகரங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்ட இலச்சினைகளில் சில அக்கால மக்கள் அன்னை வழிபாட்டினை மேற்கொண்டிருந்தனர் என்பதனை எடுத்துக்காட்டுவதாக ஆராய்வாளர்கள் கருதுகின்றனர். மேலும் சமகாலத்தனவாகிய எகிப்திய, சுமேரிய, பபிலோனிய, சிரிய, சீன, கிரேக்க நாகரிகங்களிலும் அன்னைவழிபாடு சிறப்புற்றிருந்ததென்பதனை அந்நாகரிகங்கள் பற்றி ஆராய்ந்த தொல்பொருளியலறிஞர்கள் எடுத்துக் கூறியுள்ளனர்.

சிந்து வெளியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பெண் தெய்வ உருவங்களை நுணுகி ஆராய்ந்த அறிஞர்கள் அவைகளின் அமைப்பிற்கேற்ப மூன்று வகையாகப் பிரிக்கின்றனர்.

அன்னையானவள் [illegible]வும் அருளவும் அழிக்கவும் ஆற்றல் படைத்தவள் என்ற சைவ சித்தாந்தக் கருத்திற்கு அவை விளக்கமளிப்பனவாக அமைகின்றன.

அன்னை வழிபாடு சங்க காலந் தொடக்கம் தமிழ் நாட்டில் நிகழ்ந்து வருவதற்கு இலக்கியச் சான்றுகள் நிறைய வுண்டு. சங்க இலக்கியங்களிற் பேசப்படும் கொற்றவை வழிபாடு அன்னை வழிபாட்டையே குறிக்கும்.

சங்கம் மருவிய கால இலக்கியமான சிலப்பதிகாரத்தில் சப்தகன்னியர்கள் பற்றிய செய்திகள் கூறப்படுவதுடன் அருங்கலைப்பாவை, நாமகள், முதிராச்செல்வி கௌரி, வழிநுதற்குமரி ஆகிய பெயர்களால் அன்னையானவள் அழைக்கப்படும் சிறப்பினையும் கண்ணகி வழிபாடு பற்றியும் சிலப்பதிகாரம் சிறப்புற விளக்குகின்றது

மணிமேகலை, சீவகசிந்தாமணி போன்ற பேரிலக்கியங்களிலும் பரணி நூல்களிலும் அன்னை பராசக்தி பற்றி ஆங்காங்கே பேசப்படுகின்றது தாய்த் தெய்வ வணக்கத்தில் பாவை நோன்பு என்பதும் ஒன்றாகும் பாவைநோன்பு சக்தியை வியப்பதற்கும் தொழுவதற்கும் நோற்கப்பட்டமையை மணிவாசகரின் திருவெம்பாவை ஆண்டாளின் திருப்பாவை என்பவற்றிலிருந்து அறியலாம்.

சகலகலாவல்லியான அன்னையின் அருட்செயல்களைக் குமரகுருபரரும் தமது பாடல்களில் மிக அழகாக எடுத்துரைக்கின்றார் பாரதியார் எதற்கெடுத்தாலும் அன்னை பராசக்தியிடமே வேண்டுதல் செய்கின்ற நிலையினை அவர் தம் பாடல்களிற் காண்கின்றோம்.

இவ்வாறு தாய்மையைத் தெய்வமாக வழிபடும் வழக்கம் காலக்கிரமத்தில் குறிப்பாக உபநிடத காலத்தின்பின் சக்திவழிபாடாக பரிணமித்துச் சக்தியை வழிபடுவோர் சாக்தர் எனவும் இந்துமதத்தில் சாக்தமதம் ஒரு பிரிவாகியும் வளர்ச்சி பெற்றது.

வடநாட்டில் துர்க்கா பூசை என்றும் தென்னாட்டில் நவராத்திரி என்றும் அழைக்கப்படும் சக்தி பூசை புரட்டாதி மாத அமைவாசையைத் தொடர்ந்துவரும் பிரதமை முதல் நவமி வரையான [illegible] நவராத்திரி என்பது ஒன்பது இரவுகளில் அஞ்ஞான இருளை அகற்றி மெய்ஞ்ஞான ஒளியை ஏற்றும் ஆற்றல் வாய்ந்த அன்னை பராசக்தியைத் துதிக்கை. இலக்குமி, சரஸ்வதி எனப் பல வடிவங்களில் வழிபடும் ஒரு நெறியாகும். நவராத்திரி வழிபாட்டை வடநாட்டில் புரட்சி நிலையி[illegible] தமிழ்நாட்டில் சாந்த நிலையிலும் வழிபடும் முறை உண்டென்ற கருத்தும் சில அறிஞர்களிடையேயுண்டு.

சி. மாசிலாமணி

## சமய சந்நிதிகளில்

### மானம்பூ உற்சவம்

யாழ்ப்பாணம், அக் 11

கன்னாகம் மயிலணி கந்தசுவாமி கோயிலிலிருந்து முருகப்பெருமான் இன்று (ஞாயிறு) மாலை நான்கு மணிக்குப் பக்தர்கள் புடைசூழப் புறப்பட்டு காங்கேசன் துறை வீதி வழியாக மருதனார் மடம் பல்லப்பை வைரவர் ஆலயத்தை வந்தடைந்து அங்கு நடைபெறும் மானம்பூ உற்சவத்தில்எழுந்தருளுவார்

மானம்பூ உற்சவத்தை அடுத்து முருகப்பெருமான் அதே வீதி வழியாக மயிலணி கந்தசுவாமி ஆலயத்தை வந்தடைவார் (இ)

### நியமனம்

புங்குடுதீவு, அக். 11

புங்குடுதீவு ஸ்ரீராசராசேஸ்வரி வித்தியாலயத்தின் அதிபராக திரு. செ. தனபாலசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். (ஒ-131)

## தளர்ந்த நாண்கள்

'எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள்' (லூக்கா 21:36)

சிலருக்கு திடீரென்று ஜெபம்பண்ண வராது. சபையில் திடீரென அவர்கள் பெயரைச் சொல்லி, அவர்கள் இப்பொழுது



ஜெபம் பண்ணுவார்கள் என்று அறிவித்துவிட்டால் போதும் அவர்கள் வேர்த்து தடுமாறி விடுவார்கள். காரணம், அவர்கள் ஜெபத்தை வாழ்க்கை நடைமுறையில் அப்பியாசப்படுத்திக் கொள்ளாததே!

கித்தார் என்ற இசைக் கருவியை வாசிக்காமல் மூலையில் போட்டுவிட்டீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அதிலுள்ள நாண்கள் தளர்ச்சியாகி சுருதி இறங்கி விடும். பின்பு அதைச் சரிசெய்து சுருதிக்குக் கொண்டு வரவேண்டுமானால் அதிக நேரம் பிடிக்கும். அப்படித்தான் ஜெபமும்!

சில தண்ணீர்ப் பம்பைப்பார்த்திருக்கிறேன். அடித்துக் கொண்டேயிருந்தால் தண்ணீர் கொண்டேயிருக்கும். கொட்டிக் [illegible] ஆனால் நீண்டநேரம் விட்டுவிட்டால்தண்ணீர் வராது. பிறகு கஷ்டப்பட்டு [illegible] தண்ணீர் ஊற்றி அடித்தால்தான் தண்ணீர் தொடர்ந்து வரும்.

தேவபிள்ளையே! நீ ஜெபத்தை நிறுத்திவிடுவாயானால் பின்பு அவசர நேரத்திற்கு, ஆபத்து சமயங்களுக்கு ஜெபிக்க வராது பல நாள் ஜெபிக்கவில்லையே

**ஞானக்கதிர்**

என்ற குற்ற உணர்வும் உன்னை வாட்டும். அவிசுவாசம் பிடித்துக்கொள்ளும்.

காலையில் எழும்பியதும் கடிகாரத்துக்குச் சாவிகொடுத்து தொடர்ந்து ஓடவைப்பதுபோல், ஜெப ஜீவியத்தையும் முடுக்கிவிட்டு ஜெபத்தின் பாதையில் ஓடுவாயாக.

நீரூற்றிலிருந்து தண்ணீர் பொங்கிக்கொண்டேயிருப்பதுபோல உன் உள்ளத்திலிருந்து ஜெப ஆவி பொங்கி வழிந்து கொண்டேயிருக்கட்டும். அப்பொழுதுதான் நீ சிறந்த ஜெப வீரனாய் விளங்குவாய்

"இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்யுங்கள்".

(1 தெச 5;16,17)

## வாசகர் திருமுகம்

### ஒலி, ஒளி ஒன்றியம் அளிக்கும் விளக்கம்

உள்ளூர்த் தொலைக்காட்சியின் போக்கு எனும் தலைப்பில் உதயன் பத்திரிகையின் 7—10—86ஆம் திகதி இதழில் வாசகர் திருமுகம் பகுதியில் வெளியான கடிதத்திற்கு விளக்கம்தரும் வகையில் எமது பதில் அறிக்கை வருமாறு:—

உள்ளூர்த் தொலைக்காட்சி இன்று யாழ் மாவட்டத்தில் எல்லா இடங்களிலும் இயங்குகின்றது என்பது உண்மையே.

ஆயினும் இவ்வருடத்தின் ஆரம்பத்தில் ஆரம்பத்தில் இருந்ததுபோன்ற ஒரு தன்னிச்சையான போக்குடன் ஒளிபரப்புச் செய்வது நிறுத்தப்பட்டுள்ளது.

ஒளிபரப்பாளர்கள் ஒழுங்கமைப்பு ரீதியில் ஒளிபரப்புச் செய்ய பணிக்கப்பட்டுள்ளனர்.

இதுதவிர எமது பிரச்சினைகளுக்கேற்றவகையிலும், காலத்திற்கு ஏற்றவகையிலும், ஒளிபரப்புகள் இடைநிறுத்தம் செய்யப்படுவதும், பொருத்தமான நிகழ்ச்சிகள் ஒளிபரப்புச் செய்யப்படுவதும் கூட நடந்துகொண்டேயுள்ளது.

நேயர் குறிப்பிட்டிருந்த திருமணவிழா, புதுமனைப்புகுவிழா, பூப்புனித நீராட்டுவிழா என்பன ஒளிபரப்பப்படவேண்டுமா? என்பது ஒரு நல்ல கேள்வி

ஆயினும் ஒளிபரப்பாளர்களில் பலர் தமது ஒளிபரப்புக்களை தொழில்ரீதியாக நடத்துவதன் காரணமாக இவை சேர்த்துக்கொள்ளப்படுவது தவிர்க்க முடியாதுள்ளது.

எனினும் இதுகூட முன்னர் நடந்ததுபோலில்லாது, இரவு வேளைகளில் மட்டும் வழமையான ஒளிபரப்பு முடிவடைந்த பின்னர் ஒளிபரப்புச் செய்வதற்கு ஒழுங்கு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது

குறிப்பிட்ட நேரத்திற்குப் பின்னர் ஒளிபரப்பாகும் இதுபோன்ற நிகழ்ச்சிகளை நிகழ்ச்சியுடன் சம்பந்தப்பட்டவர்கள் மட்டுமே பார்க்க விரும்புவார்கள் என்ற அடிப்படையில் இவ்வாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எமது கலை, கலாசாரம் சம்பந்தமான நிகழ்ச்சிகள். கல்வித்துறை சம்பந்தமான நிகழ்ச்சிகள் என்பவற்றுக்கான நிகழ்ச்சித் தயாரிப்புகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அநேகமாக 87ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து இவை ஒளிபரப்பில் கணிசமான அளவு இடம்பெறும்

இணைக்கட்டுப்பாட்டாளர்,
ஒலி, ஒளி ஒன்றியம்

யாழ்ப்பாணம்

### புதுக்குடியிருப்பில்

யாழ்ப்பாணம், அக் 12


சிறைக்கைதிகளின் உண்ணாவிரத போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் தமிழ்ப் பிரதேசங்களில் அரச படைகளால் நடத்தப்படும் அடாவடித்தனங்களைக் கண்டித்தும் நடந்த வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் யாழ்- பல்கலைக்கழக மாணவர்களினாலும், பாடசாலை மாணவர்களினாலும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தப்பட்டது. (இ)

### இடமாற்றம்

பலாலி, அக். 12

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் கடமையாற்றிவந்த விஞ்ஞான ஆய்வுகூட உதவியாளர் இலிகிதர் க. வி. யோசப் திடீரென வேறிடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

விஞ்ஞானகூட உதவியாளர் திரு. செல்லத்துரை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும், இலிகிதர் திரு கே. உருத்திரமூர்த்தி கல்வி அலுவலகத்திற்கும் மாற்றப்பட்டுள்ளனர். (இ-119)



**பொய்யாமொழி**

குறள்:

மனத்தது மாசாக மாண்டார் நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்.

பொருள்:

மனத்தில் மாசு இருக்கத் தவத்தால் மாண்பு பெற்றவரைப் போல் நீரில் மூழ்கி மறைந்து நடக்கும் வஞ்சனை உடைய மாந்தர் உலகில் பலர் உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

COMPUTER PROGRAMMING
Basic Language
6 Months — Weekends
Date of Commencement;
25th October 1986 at 10 A. M.

Cantabia Institute
21, Main Street, Jaffna.
T'Phone 24201

# உதயன்

12 - 10 - 1986 ஞாயிற்றுக்கிழமை

COMPUTER PROGRAMMING
Learn from the pioneers in computer education
Fees: 1500/- (payable in installments)
Practicals in fully air conditioned environment for not less than 60 hours

Cantabia Institute
21, Main Street, Jaffna.
T'-Phone: 24201

## பெருமாள் கோயில் தேர்த் திருவிழா சிறப்பாக நடந்தது

யாழ்ப்பாணம், அக். 12

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய இரதோற்சவம் நேற்று சிறப்பாக நடந்தேறியது.

காலை 8-00 மணியளவில் சுவாமி இரதத்தில் ஆரோகணிக்க எழுந்தருளி வந்தார். பெருமாள், தேரில் வீதிவலம் வந்தபோது சன சமுத்திரத்தின் நடுவே கப்பல் வந்தது போன்று அசைந்தாடிய காட்சி கண்கொள்ளாக் காட்சியாக, அற்புதக் காட்சியாக இருந்தது.

தேரின் பின்னே கோவிந்தநாம பஜனையும் நடைபெற்றது. பக்தர்கள் கோவிந்தா, கோவிந்தா என்று முழக்கமிட்ட வண்ணம் பக்திப் பரவசத்துடன் பரந்தாமனின் அருள் வேண்டி நின்றனர்.

வெளியூர்களில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான மக்கள் தேர்த் திருவிழாவுக்கு வந்தனர்.

தேர்த் திருவிழா முடிவுறும் சமயத்தில் நகரில் ஷெல் குண்டு வீச்சு நடந்ததால் பக்தர்கள் பதற்றமடைந்து வீடு திரும்ப அவதிப்பட்டனர். (அ)

# யாழ்ப்பாணத்தில் பிரபாகரன் வைத்துதான் சட்டம்

### நாடாளுமன்றத்தில் மத்துகம எம். பி

கொழும்பு, அக். 12

யாழ்ப்பாணத்தில் பிரபாகரன் வைத்ததுதான் சட்டம். வேறு சட்டம் எதுவும் அங்கு இல்லை.

இப்படி மத்துகம எம். பி. திரு. அனில் முனசிங்க கடந்த வியாழன் நாடாளு மன்றத்தில் பேசுகையில் சொன்னார்.

திரு. அனில் முனசிங்க மேலும்சொன்னதாவது:

இராணுவம் புதிய ஆயுதங்களைக் கொண்டு கிழக்கில் வெற்றிகரமாக தாக்குதல்களை நடத்தியது. இப்படியான தாக்குதல்கள் தொடர்ந்து இடம் பெறவேண்டும்.

அரசியல் தீர்வு காணப்படுவதற்கு முன்னர் தீவிரவாதம் ஒழிக்கப்பட வேண்டும்.

எப்படி தீவிரவாதிகளைத் தோற்கடிக்கலாம் என்பதை நான் பிரதமருக்கு இரகசியமாகத் தெரிவித் திருக்கின்றேன்.

தீவிரவாதிகளைத் தோற்கடிக்கும் திட்டம் ஒன்றை பிரதமரும் வைத்திருக்கின்றார் அதை அமுல் நடத்த முடியாமல் முட்டுக்கட்டை போடப்படுகின்றது.

படையினர் பற்றி பிரபாகரன் அறிக்கை விடுகின்றார். பிரச்சினையைத் தீர்க்க இந்தியா எடுக்கும் முயற்சிகளை அவை பாதிக்கக் கூடும்.

வடக்கு, கிழக்கில் தீவிரவாதிகளைத் தோற்கடிக்க அரசு புதிய இராணுவ உத்தியைக் கையாள வேண்டும்.

இப்படி திரு. முனசிங்க சொன்னார்.

அத்தனகலை எம். பி. லக்ஷ்மன் ஜெயக்கொடி பேசுகையில்,

மூதூர்த் தொகுதியில் உள்ள கொட்டியாரப் பற்று முழுவதையும் திருமலைத் துறைமுகப் பிரதேசமாக்க வேண்டும் என்று சொன்னார்.

கொத்மலை எம். பி திரு. ஆனந்த தஸநாயக்கா பேசுகையில் சொன்னதாவது;

மலையகத்தில் சிங்கள இளைஞர்களை தீவிரவாதச் சக்தி ஒன்று துன்புறுத்துகிறது.

தொண்டமான் பலமிக்க நிலையில் இருப்பதாக நினைக்க வேண்டாம்.

இந்தக் காலத்தில் ஒரு நாள் தொண்டமானையும் தீவிரவாதிகள் கொண்டு போய் விடுவார்கள்.

இப்படி திரு. தஸநாயக்கா சொன்னார். (இ-எ)

### சிப்பாய்கள் .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கோவிலின் ஆலய மணி இராணுவத்தினரால் அடிக்கப்பட்டது.

மணி ஓசையைத் தொடர்ந்து இராணுவ முகாமில் இருந்து ஒரு தடவை ஷெல் அடியும் இடம் பெற்றது. துப்பாக்கிச் சத்தங்களும் கேட்டவண்ணமிருந்தன.

ஹெலிக்கொப்டர் ஒன்று முகாமின் மேற்குப் பக்கமாக வந்தபோதும் அது தரை இறங்க முடியாது முகாமின் மேலேயே வட்டமிட்டுப் பறந்து சென்றது. (இ-160)

### இறந்தோர்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

சுபாஸ் கபேயில் சமையல் வேலை செய்து வந்த இவருக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர்.

சுப்பிரமணியம் ஜெயபால் (30வயது) மூளாய் வாசியான இவர் நகரில் டாக்சி டிரைவராகக் கடமையாற்றி வந்தார். குடல் வெளியேறிய நிலையில் இவர் இறந்துகிடக்கக் காணப்பட்டார்.

மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. க. கேசவன் நடத்தினார். சடலங்கள் யாவும் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

ஷெல் குண்டுவெடிப்பை அடுத்து ஒரு வயதுக் குழந்தை ஒன்று அதிர்ச்சி அடைந்த நிலையில் யாழ். வைத்திய சாலைக்கு கொண்டு வரப்பட்டு மரணமானது.

சடலம் உறவினர்களால் எடுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிய வருகிறது. (இ-10)

### காயம் அடைந்..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ந்தன் (6 வயது) (7) ஞானசேகரம்(33 வயது) (8) பசுபதி நிமல்தாஸ் (2 வயது) (9) அப்பு நாயர் சவுந்தர ராஜன் (10) எஸ். பாலகிருஷ்ணன் (40 வயது) (11) செட்டியார் பழனிச்சாமி (38 வயது) (12) ஏ. ஜெயக்குமாரி (4 வயது) (13) கு. சோமசுந்தரம் (40வயது) (14) பி. லிங்கேஸ்வரன் (20 வயது) (15) அறிவு (18 வயது) (16) பிரான்சிஸ் ஜேஸ் (56 வயது) (17) மோகன் பெனடிக் (18 வயது) (18) தோமஸ் ஜோன் (56 வயது) (இ-10)

### இன்று ஆரம்பம்

காங்கேசன்துறை அக்.12

நாதஸ்வர தவில் பயிற்சிப் பாடசாலையின் ஆரம்ப வைபவம் இன்று காலை 10 மணிக்கு தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலய வளவில் இடம் பெறுகின்றது.

யாழ். அரச அதிபர் திரு எம். பஞ்சலிங்கம், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் மங்கள விளக்கேற்றி இவ் வைபவத்தை ஆரம்பித்து வைப்பார்கள்.

பிரபல கலைஞர்கள் என். கே. பத்மநாதன், என். ஆர். சின்னராஜா உட்பட மற்றும் பிரபல கலைஞர்கள் பிரதம விருந்தினர்களாக பங்குபற்றுவார்கள்.

பாடசாலை நிர்வாக ஒழுங்குகளை யாழ். மாவட்ட அமைச்சு செயலாளர் திரு. எஸ். பாலசிங்கம் மேற்கொண்டுள்ளார். (உ-68)

## விளையாட்டரங்கு

### தேசிய நீச்சல் போட்டி:

## அருண் சுந்தரேசன் புதிய சாதனை

கொழும்பு, அக். 12

கொழும்பில் நடைபெற்ற தேசிய நீச்சல் சம்பியன் போட்டிகளில் 12 வயதுக்குட்பட்ட பிரிவில் பத்து வயது நிரம்பிய செல்வன் அருண் சுந்தரேசன் புதியசாதனை ஒன்றை நிலைநாட்டினார்.

அருண் சுந்தரேசன். கொழும்பு சென். தோமஸ் ஆரம்ப பாடசாலை மாணவன்.

இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பையும் அருண் சுந்தரேசன் பெற்றுள்ளார்.

50 மீட்டர் (டொல்பின் நிலையில்) போட்டியில் அருண் சுந்தரேசன் முதலாவதாக வந்தார். எடுத்துக் கொண்ட நேரம் 37.80 விநாடிகள்.

இரண்டாவதாக வந்த சென் ஜோசப் கல்லூரி மாணவன் செருகா பொன்சேகாவை திறமையான முறையில் இவர் தோற்கடித்தார்.

200 மீட்டர் (மெட்லி தனி) நீச்சல் போட்டியிலும் அருண் சுந்தரேசன் முதலாவதாக வந்



அருண்

தார். இவர் எடுத்துக் கொண்ட நேரம் 3 நிமிடங்கள் 11.40 விநாடிகள் ஆகும். (இ-எ)

# வல்வை, பருத்தித்துறை பகுதிகளில் வந்திறங்கிய திருகோணமலை அகதிகள்

வல்வெட்டித்துறை, அக். 12

திருகோணமலையிலிருந்து நேற்று 300 க்கு மேற்பட்ட அகதிகள் இரு படகுகளில் பருத்தித்துறையையும், வல்வெட்டித்துறையையும் வந்து சேர்ந்தனர். இவர்களில் அனேகர் பெண்கள்.

இவர்கள் அகதி முகாம்களிலும் உறவினர்கள் வீடுகளிலும் தங்கி உள்ளனர்.

உதயன் செய்தியாளரிடம் இவர்கள் தமது அனுபவத்தை பின்வருமாறு தெரிவித்தனர்;

திடீரென்று கிராமங்களுக்குள் புகுந்த சிப்பாய்கள் இளம் பெண்கள் உட்பட 500 க்கு மேற்பட்டோரை டிரக் வண்டிகளில் ஏற்றிச் சென்றனர். இதை நாம் கண்டோம்.

அப்படிக் கொண்டு போகும்போது அவர்கள் எழுப்பிய அவலக் குரல்கள் இன்னும் எமது காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

சிப்பாய்களில் சிலர் பெண்களைத் தகாத வார்த்தைகளால் ஏசிப் பயமுறுத்தினர்.

நாம் பகல் வேளைகளில் காடுகளில் பதுங்கி இருந்தோம். உணவு கூட எமக்கு இல்லை. இரவு வேளைகளில் தான் பயணத்தைத் தொடர்ந்தோம்.

ஆழியவளைக் கடலில் படகு வந்த போது மெய் சிலிர்க்கும்நிகழ்ச்சி இடம் பெற்றது. வெட்டப்பட்ட ஆண் சடலத்தில் ஒரு பகுதி கடலில் மிதந்து வந்து கொண்டிருந்ததைக் கண்டோம்.

இப்படி அவர்கள் தெரிவித்தனர். (இ-எ-160)

# மன்னார். கிளிநொச்சி சம்பவங்கள் பற்றி புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், அக். 12

மன்னார், கிளிநொச்சி சம்பவங்கள் சம்பந்தமாக தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கை வருமாறு:-

மன்னார்:-

வெள்ளி காலை முருங்கன் இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் 50 பேருக்கு மேல் வாகனங்களிலும், கால் நடையாகவும் தள்ளாடி இராணுவ முகாமுக்குச் சென்றுகொண்டிருந்த சமயம் எமது வீரர்கள் முதலைக்குத்தி எனுமிடத்தில் வைத்து நேரடி தாக்குதல் நடத்தினர்.

இத் தாக்குதலின் போது இராணுவத்தினர் உடனடியாக பின் வாங்கிவிட்டனர். இராணுவதரப்பின் சேத விவரங்கள் தெரியவில்லை.

கிளிநொச்சி:- நேற்றுக் காலை கிளிநொச்சி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் பஸ் டிப்போ சந்தியில் நின்றவாறு துப்பாக்கிப் பிரயோகமும், முகாமில் இருந்தவாறு மோட்டோ ஷெல் தாக்குதலும் நடத்தினர்.

பதிலுக்கு எமது தரப்பினரும் தாக்குதல் மேற்கொண்டனர். சேத விவரம் தெரியவில்லை. (இ)

### பெரியாஸ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாரிய குழி ஒன்று ஏற்பட்டுள்ளது.

நேற்றைய தாக்குதலின்போது மேகநோய் கட்டடப்பகுதிக்குள் இருந்த சிகிச்சை உபகரணங்கள் குளிர்சாதனப் பெட்டிகள் அனைத்தும் சேதமடைந்தன.

இத் தாக்குதல்கள் பகல் வேளையில் நடந்திருந்தால் பல நோயாளிகள் இறந்திருக்கலாம் என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஷெல் விழுந்து வெடித்தபோது 24 ஆம் 22ஆம் வார்ட்டுகளில் இருந்த நோயாளிகள் பார்வையாளர்கள், தாதிமார்கள், ஊழியர்கள், அனைவரும் சிதறி ஓடினார்கள்.

உடனடியாக இந்த வார்ட்டுகளில் இருந்த நோயாளர்கள் அனைவரும் வேறு வார்ட்டுகளுக்கு மாற்றப்பட்டனர்.

இது தொடர்பாக உடனடியாக யாழ் கோட்டை முகாம் பொறுப்பதிகாரிக்கு வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்ததை அடுத்து நகரில் ஷெல் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டன. (இ-10)

### அடுத..

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ஷெல் குண்டுகள் இதன் மூலம் ஏவலாம் என்று தெரியவருகிறது.

சாந்தி தியேட்டருக்கு அருகாமையில் நேற்று அடுத்தடுத்து ஐந்து ஷெல் குண்டுகள் விழுந்து வெடித்தன. (இ-10)

### புலிகள்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

டும் மோட்டோ ஷெல் தாக்குதல் நடத்தினர்.

எமது தரப்பினர் பதிலடியாக 6 அங்குல மோட்டோ ஷெல் தாக்குதலை கோட்டையை நோக்கி நடத்திய வண்ணம் இருந்தனர்.

தாக்குதலில் எமது தரப்பில் ஒருவர் காயமடைந்தார். (இ)

### யாழ்நகரில் ஷெல் ..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

**வீடுகள், கடைகள் சேதம்**

கொட்டடிப் பகுதியில் விழுந்து வெடித்த ஷெல்கள் காரணமாக சில வீடுகள் சேதமடைந்துள்ளன. வீதிகளில் பாரிய குழிகளும் ஏற்பட்டுள்ளன.

சாந்தி தியேட்டருக்கு அண்மையில் அடுத்தடுத்து ஏவப்பட்ட ஷெல் குண்டுகள் காரணமாக அப்பகுதி ஒரே புகை மண்டலமாக காட்சியளித்தது. வாழைமரங்கள், தென்னை மரங்கள் அனைத்தும் முறிந்து காணப்பட்டன.

நகரில்உள்ள சோபிகா ஹோட்டல், அமுதசுரபி, டில்கா இறிம்ஹவுஸ்,ஒட்டோஸ் லிமிட்டெட் ஆகிய கடைகள் தாக்குதல்களினால் சேதமடைந்துள்ளன.

[illegible] அருகாமையில் [illegible] என் பவரது வீட்டு வளவினுள் ஷெல் விழுந்ததன் காரணமாக அங்கு நின்ற மூன்று பேர் காயமடைந்தனர்.

காரொன்றும் சேதமானது. வீடும் மதிற்சுவரும் சேதமடைந்தன.

ஒட்டோஸ் மேல்தளத்தில் கட்டப்பட்டு வரும் கட்டடமும் ஷெல் தாக்குதலினால் இடிந்து விழுந்துள்ளது.

தொலைத் தொடர்புத் திணைக்களம், பொது நூலகப்பகுதி, புல்லுக்குளம் ஆகிய பகுதிகளிலும் ஷெல் குண்டுகள் விழுந்து வெடித்தன.

**ஆஸ்பத்திரியில்**

யாழ் ஆஸ்பத்திரி மேல் மாடியில் உள்ள மகப்பேற்று வார்ட்டினுள்ளும் நேற்றுதுப்பாக்கிச் சன்னம் ஒன்று பாய்ந்தது.

கர்ப்பிணிப்பெண் ஒருவர் மயிரிழையில் உயிர் தப்பினார்.

வார்ட்டினுள் விழுந்த [illegible] அத்தியட்சகரிடம் ஒப்ப[illegible] (அ-10)

### பாதிப்புற்ற. . .

(3ம் பக்கத் தொடர்ச்சி)

களினால் பாதிக்கப்பட்ட — மன்னார் பட்டினத்தில் வசிக்கும், வேலைபாக்கும் — அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு விசேட முற்பணமாக ரூபா ஆயிரம் வழங்கப்பட்டு வருகின்றது.

மன்னார் அரசாங்க அதிபர் ஜனாப் எம் எம். மக்பூலின் முயற்சியினால் பொது நிர்வாக அமைச்சின் அனுமதியுடன் இப்பணம் வழங்கப்படுகிறது. (உ)

### ஸ்ரீலங்காவுக்கு...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

தையும் இலங்கை, அமெரிக்காவிடம் இருந்து பெற்றுக் கொள்ளும்.

இந்த உதவி திட்டத்தின் கீழேயே நிக்கரகுவா இடதுசாரி அரசாங்கத்துக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள வலதுசாரிக் கெரில்லாக்களுக்கு அமெரிக்க அரசு உதவுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வெளிநாட்டு உதவித் திட்டத்தின் கீழ் இலங்கையும் சேர்த்துக் கொள்ளப் பட்டிருப்பதாகக் கூறும் அமெரிக்க ராஜாங்க அமைச்சின் அறிக்கை கடந்த மாதம் 23 ஆம் திகதி அமெரிக்க நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

**உதவி விவரம்**

அமெரிக்க வெளிநாட்டு உதவித் திட்டத்தின் 571 ஆவது பிரிவு கூறுவதாவது;

ஆட் கடத்தல், விமானக் கடத்தல், குண்டு வீசுதல், பணயக் கைதிகளை வைத்து இருத்தல் போன்ற பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடும் பயங்கரவாதிகள், பயங்கரவாதக் குழுக்கள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தக்கூடிய விதத்தில் சம்பந்தப்பட்ட நாடுகளில் உள்ள சட்ட பூர்வமான பாதுகாப்புப் படையினரின் திறமையை அதிகரிக்கும் உதவிகளை வழங்குதல்.

அந்த உதவிகள் வருமாறு;

பயிற்சி வழங்குதல், அதற்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் பொருள்களை வழங்குதல், குண்டுகளைக் கண்டு பிடித்து அழிக்கும் சாதனங்களை வழங்குதல், பணயக் கைதிகளை மீட்கும் நடவடிக்கைகளுக்கு உதவுதல், பணயக்கைதிகளின் உடல், உயிர் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளித்தல்.

572 ஆவது பிரிவு கூறுவதாவது;

பயங்கரவாதிகளின் தாக்குதல்களை தடுத்து நிறுத்தும் உதவிகளை சிநேக நாடுகளுக்கு அதிகரித்தல்;

பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை பலனளிக்கக்கூடிய விதத்தில் மனித உரிமைகளுக்கு வழங்கப்படும் மதிப்பை அதிகரித்தல்-இவ்வாறு அமெரிக்க வெளிநாட்டு உதவித் திட்டத்தின் 571, 572 ஆவது பிரிவுகள் கூறுகின்றன. (அ-எ)

### நவராத்திரி நிகழ்ச்சிகள்

வட்டுக்கோட்டை அக்.12

சித்தன்கேணி கணேச வித்தியாலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை 'விஜய தசமி' விழா நடைபெறுகிறது.

வித்தியாலய இந்து மாமன்றத் தலைவர் திரு. க. நல்லையா ஆசிரியர் தலைமையில் நடைபெறும் இவ்விழாவன்று வித்தியாலய அதிபர் சைவப்புலவர் திரு. நா. க. தங்கரத்தினம் மாணவர்களுக்கு ஏடு தொடக்கி வைப்பார். (இ-161)

* * *

வட்டுக்கோட்டை,அக்12

வட்டுக்கோட்டை சிவன் கோவிலடி கலைவாணி கல்வி நிலையத்தினர் இன்று ஞாயிற்றுக்கிழமை நவராத்திரி விழாவை கொண்டாடுகின்றனர்.

விழாவை முன்னிட்டு 'கையெழுத்துப் பத்திரிகை' ஒன்று வெளியிடப்படும்.

இராமனிடத்தில் மிகுந்த பற்றுள்ளவன் இலக்குவனா? பரதனா? பட்டிமன்றமும் மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும். (இ-161)

### இந்திய நிலையை

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ஜனாதிபதியைச் சந்தித்து மேற்கண்ட தகவலை இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஸிற் தெரிவித்தார்.

45 நிமிடங்கள் நீடித்த அச்சந்திப்பின் போது, நுகேகொட கூட்டத்தில் ஜனாதிபதி நிகழ்த்திய பேச்சு, இனப்பிரச்சினைத் தீர்வில் இலங்கை கொண்டிருக்கும் நிலையில் மாற்றம் ஏற்பட்டிருப்பதைக் காட்டுகின்றதா? — என்றும் ஜனாதிபதியிடம் இந்தியத் தூதர் வினவினார்.

'ஆயுதங்களைத் தீவிரவாதிகள் கீழே வைத்த பின்னர்தான் மாகாண சபைகள் சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்' என்ற ஜனாதிபதிப் பேச்சுக் குறித்தே இந்திய அரசு இலங்கையிடம் விளக்கம் கேட்டிருந்தது.

**ஜனாதிபதி விளக்கம்**

இந்தியத் தூதரிடம் விளக்கம் அளித்தபோது ஜனாதிபதி சொன்னதாவது:

நுகேகொட பேச்சு இலங்கைக் கொள்கையின் மாற்றத்தைக் காட்டவில்லை.

கடைசியாக இந்தியாவுக்கு அனுப்பிவைத்த யோசனைகளில் இலங்கை இன்னும் உறுதியாகவே உள்ளது.

நுகேகொட பேச்சை வைத்து இலங்கைப் போக்கில் மாற்றம் ஏற்பட்டிருப்பதாகக் கணிக்கக்கூடாது. நிலையை யதார்த்த பூர்வமாக கணிக்கும் வகையில் என் பேச்சு அமைந்தது. வடக்கு – கிழக்கு நிலை குறித்து மக்களுக்கு உணர்த்தவே நான் அப்படிப் பேசினேன்.

'சார்க்'உச்சி மாநாட்டின்போது பிரதமர் ராஜீவுடன் எல்லாம் விவரமாகப் பேச இருக்கிறேன் – இப்படி ஜனாதிபதி இந்தியத் தூதரிடம் தெரிவித்தார். (அ-எ)

### தேவை

தையல்வேலை தெரிந்தவர் உடன் தேவை.
"ராதா ரெயிலறிங்"
பிரதான வீதி,
அச்சுவேலி.

## 43ஆம் நாள் நினைவு அஞ்சலி



தோற்றம்: 1965 - 03 - 06
மறைவு: 1986 - 8 - 31

திரு. திருமதி கந்தையா—ராசகிளி
அவர்களது அன்புப் புதல்வி

**செல்வி க. சோதி**

உங்கள் பிரிவால் துயருறும்
தந்தை, தாய், சகோதரர், சகோதரிகள்,
மற்றும் உற்றார், உறவினர்கள்,
குசையப்பர் கோவிலடி,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை, 15ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது வெளியிட்ட திகதி:- 12 — 10 — 1986

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under Number QJ60N86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org